VetriPadigal.com

இந்த வலைதளம் TNPSC தேர்விற்கு தயார் செய்யும் நண்பர்களுக்கு உதவும் நோக்கத்தில் தமிழக அரசின் புதிய சமச்சீர்க்கல்வி பாடப்புத்தகத்திலிருந்து பாடக்குறிப்புகள் வழங்குப்பட்டுள்ளது. மேலும் இதில் 5000 க்கும் மேற்பட்ட Objective Type Questions வழங்கப்பட்டுள்ளது. இதிலுள்ள மாதிரித் தேர்வுகளில் நீங்கள் பயிற்சி பெறலாம். தொடர்ந்து புதிய பாடக்குறிப்புகளும் வழங்க இருக்கிறோம்....

https://www.vetripadigal.com/

https://www.vetripadigal.com/tnpsc-online-test/

# 6 ஆம் வகுப்பு - தமிழ்

## மூன்றாம் பருவம்

### பாரதம் அன்றைய நாற்றங்கால்

- ஆசிரியர் – தாராபாரதி
- தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன்.
- ‘கவிஞாயிறு’ என்னும் அடைமொழி பெற்றவர்.
- புதிய விடியல், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.
- தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் – திருக்குறள்.
- இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- **பாடல்** - புதுமைகள் செய்த தேசமிது, பூமியின் கிழக்கு வாசலிது

### தமிழ்நாட்டில் காந்தி

- 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார்.
- 1919 ல் ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கொடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது.

- 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்கு சென்றார்.
- காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் – மதுரை.
- ஜி.யூ.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார்.
- திருக்குறள் அவரை கவர்ந்த நூலாகும்.
- 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் உ.வே.சா வரவேற்புக்குழு தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.
- "இந்த பெரியவரின் (உ.வே.சா) அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

## வேலுநாச்சியார்

- இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றை முறையாக கற்றுக் கொண்டார்.
- சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்துகொண்டார்.
- காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமணரம் அடைந்தார்.
- ஆங்கிலேயர்களை எதிர்த்து திண்டுக்கல் கோட்டையில் வேலுநாச்சியார் தங்கி ஒரு படையைத் திரட்டி பயிற்சி அளித்தார்.
- திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அங்கு நடுவே வேலுநாச்சிய்யார் அமர்ந்திருந்தார். அவரை சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகள் பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.
- மைசூரிலிருந்தும் ஐதர் அலி ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் அனுப்பி வைத்தார்.
- ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப்பிரிவிற்கு குயிலியும் தலைமை ஏற்றனர்.
- காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கியேரின் படை தோற்று ஓடியது.
- வேலுநாச்சியார் ஆங்கிலேயரிடமிருந்து மீண்டும் சிவகங்கையை கி.பி.1780 ஆம் ஆண்டு மீட்டார்.
- வேலுநாச்சியாரை ஆங்கிலேய அரசிடம் காட்டிக் கொடுக்க மறுத்ததால் உடையாள் என்னும் பெண் கொள்ளப்பட்டாள். சிவகங்கை செல்லும் வழியில் உடையாளுக்காக நடுகல் நடப்பட்டது.
- வேலுநாச்சியாரின் காலம் **1730 – 1796**

## பராபரக்கண்ணி

- ஆசிரியர் – தாயுமானவர்.
- தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது இப்பாடல்.
- இந்நூல் "தமிழ் மொழியின் உபநிடதம்" என்று அழைக்கப்படுகிறது.
- பராபரக்கண்ணி என்னும் தலைப்பில் 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகையாகும்.

சொல்லும் பொருளும்

- தண்டருள் – குளிர்ந்த கருணை, செம்மையருக்கு – சான்றோர்க்கு



Vetripadigal.com

## நீங்கள் நல்லவர்

- ஆசிரியர் – கலீல் கிப்ரான். இவர் லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்.
- இப்பாடப்பகுதியை கலீல் கிப்ரான் எழுதிய நூலை கவிஞர் புவியரசு "தீர்க்கதரிசி" என்னும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

## பசிப்பிணி போக்கிய பாவை

- புத்த பீடிகை மணிபல்லவ தீவில் உள்ளது. அத்தீவின் காவலர் தீவதிலகை.
- அங்குள்ள பொய்கையின் பெயர் கோமுகி, 'கோ' என்றால் பசு, முகி என்றால் முகம் என்று பொருள்.
- மணிமேகலா தெய்வம், மணிமேகலையை அழைத்துச்சென்ற தீவு – மணிபல்லவத் தீவு.
- வைகாசித் திங்கள் முழு நிலவு நாளில் இப்பொய்கையில், நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும், அது ஆபுத்திரன் கையில் இருந்த 'அமுதசுரபி' என்னும் பாத்திரம்.
- மணிமேகலையின் கையில் இருந்த அமுதப்பாத்திரத்தில் முதன் முதலில் உணவு இட்டவர் ஆதிரை.

## பாதம்

- ஆசிரியர் - எஸ்.ராமகிருஷ்ணன்.
- உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் இவரின் படைப்பகள்.
- இக்கதை 'தாவரங்களின் உரையாடல்' என்னும் சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## ஆசியஜோதி

- ஆசிரியர் – தேசிய விநாயகனார்.
- கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.
- ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய 'லைட் ஆஃப் ஆசியா' என்னும் நுலைத் தழுவி எழுதப்பட்டது.
- இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.
- கும்பி – வயிறு, பூதலம் – பூமி

## மனித நேயம்

- இந்தியாவில் அமைதிக்கான முதல் நோபல் பரிசினைப் பெற்றவர் - அன்னை தெரசா.
- அமைதிக்கான இரண்டாம் நோபல் பரிசினைப் பெற்றவர் 'கைலாஷ் சத்யார்த்தி'.
- 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' என்னும் இயக்கத்தைத் தொடங்கியவர் கைலாஷ் சத்யார்த்தி.
- கைலாஷ் சத்யார்த்தி கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார்.
- உலக குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார்.

- ✓ குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தை குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது – கைலாஷ் சத்யார்த்தி.
- ✓ "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை" – அன்னை தெரசா.
- ✓ தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென
  முயலுநர் உண்மையானே – புறநானூற்று பாடல் அடிகள்.
- ✓ "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" – வள்ளலார்.

## முடிவில் ஒரு தொடக்கம்

- விபத்தில் மூளை செயலிழந்துவிட்ட தங்களது மகனின் இதயத்தை கொடையாகத் தந்த மருத்துவ தம்பதியினர் – அசோகன், புஷ்பாஞ்சலி.
- சிறுமிக்குப் பொருத்தப்பட்ட இதயத்திற்குரிய இளைஞனின் பெயர் ஹிதேந்திரன்.

### தகவல் துளி

- வ.உ.சிதம்பரனார் வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை கொண்டிருந்தார்.
- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் "சுதேசி நாவாய் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- அன்பினில் இன்பம் காண்போம், அறத்தினில் நேர்மை காண்போம் – இவ்வரிகளை எழுதியவர். – புலவர்.அ.முத்தரையனார். மலேசியக் கவிஞர்.
- தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – கவிமணி, இயல்பு நவிற்சி அணி.

VetriPadigal.com